செ.வெ.எண்.172/2009(செமதொஅ) நாள் :18.06.2009.

**திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மொளசூர், வல்லம் ஊராட்சிகள் மற்றும் திருப்பெரும்புதூர் பேரூராட்சி பகுதிகளில் பொதுமக்கள் குறை அறியும் கூட்டம் நடைபெற உள்ளது.**

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மொளசூர், வல்லம் ஊராட்சிகளிலும், திருப்பெரும்புதூர் பேரூராட்சி பகுதிகளிலும் பொதுமக்கள் குறை அறியும் கூட்டம் 20.06.2009 அன்று நடைபெற உள்ளது. பொதுமக்கள் குறை அறியும் கூட்டத்திற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் திருமதி. டி. யசோதா, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. த.துரைசாமி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிய உள்ளார்கள்.

20.06.2009 சனிக்கிழமை காலை 10 மணிக்கு மொளசூர் ஊராட்சியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பிற்பகல் 3 மணிக்கு திருப்பெரும்புதூர் பேரூராட்சியிலுள்ள ஜலான்மல் ஜீக்ராஜ் அரசினர் மேல்நிலைப் பள்ளியிலும், வல்லம் ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாலை 4 மணிக்கும் பொதுமக்கள் குறை அறியும் கூட்டம் நடைபெற உள்ளது. எனவே மொளசூர், வல்லம் ஊராட்சிகள் மற்றும் திருப்பெரும்புதூர் பேரூராட்சியை சேர்ந்த பொதுமக்கள் தங்களது குறைகளை மனுக்களாக எழுதி பொதுமக்கள் குறை அறியும் கூட்டத்தில் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.